சின்னமனூர் சர்க்கரை வணிகர்கள்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) :** மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) பெரியகுளம் மாவட்ட ஆட்சி துணைத்தலைவர் 1969 பிப்ரவரித் திங்கள் 22-ம் நாளன்று மதுரை மாவட்ட சின்னமனூரில் சர்க்கரை விற்க அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களின் உரிமங்களை எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்து, அடுத்த 48 மணி நேரத்திற்குள்ளாக மொத்த சேமிப்பையும் அவர்கள் ஒப்படைக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தாரா ?

(இ) மாவட்ட வருவாய் அதிகாரிகளிடமிருந்து தடுப்பு ஆணை ஒன்றை அவ்வணிகர்கள் பெற்றுர்களா ?

(உ) மேற்கூறிய தடுப்பு ஆணை துணைத்தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டும் கூட வணிகர்கள் சேமித்திருந்த சர்க்கரையை அச் சுறுத்தி பலவந்தமாக கைப்பற்றினுரா ?

(எ) ஆம் எனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) and (எ) மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியின் இடைக்காலத் தடையுத்தரவு வரும் முன்பே, 11—2—69 அன்று, சப்-கலெக்டரின் உத்தரவு நிறைவேற்றப்பட்டு விட்ட காரணத்திஞல் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியின் உத்தரவை செயல்படுத்த முடியவில்லை.

*Blood Donations.*

* 269 *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) the rate at which donations of blood are being paid for in Government Hospitals ;

(*b*) when this rate was fixed ; and

(*c*) whether this rate of payment is found adequate to attract sufficient quantities of blood donations ?

**மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) அரசாங்க மருத்துவ மனைகளில் குருதிக்கொடை வழங்கும் ஒவ்வொருவருக்கும் ரூ. 7 அளிக்கப்படுகிறது.

(இ) இத் தொகை வீதம் 22—8—1957 முதல் செயலில் இருந்து வருகிறது.

(உ) குருதிக்கொடை அளிப்போருக்கு 1957 தொடங்கி 7 ரூபாய் அளிப்பது வழக்கில் இருந்து வருகிறது. இத்தொகையை அதிகரிக்க வேண்டுமென்று எவரும் கேட்டதாகத் தெரியவில்லை. குருதிக் கொடை அளிப்பவர்கள் வழக்கம்போல் உற்சாகத்துடன் குருதியளிக்க முன் வருகின்றனர்.

**திரு. டி. சந்தோஷம்:** ரூ. 7 கொடுப்பதாகத் தெரிகிறது. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் டி.ஏ. மற்றும் எல்லா வகையிலும் சலுகை உயர்ந்து கொண்டே போகிறது. இது மட்டும் ரூ. 7-லேயே இருந்து வருகிறது. விலைவாசியும் ஜாஸ்தியாயிருக்கிறது. பிரைவேட் ஆஸ்பத்திரிகளில் இதைவிட அதிகமாகக் கொடுக்கிறுர்கள். மதுரை கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிகளில் உள்ள கவர்ன்மெண்ட் பிளட் பாங்க்கில் பிளட் இல்லாததால் அநேக ஆபரேஷன்கள் ஒத்திப் போடப்படுகின்றன. இதை அரசாங்கம் கவனத்தில் வைத்து நடவடிக்கை எடுக்குமா ?

28th March 1969]

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மற்ற அலுவலசங்களில் பணிபுரிகிறவர்கள் விஷயம் வேறு. குருதிக்கொடை அளிப்பவர்கள் தங்கள் மனமொப்பி அளிக்கிறார்கள். நல்ல எண்ணத்தோடு சமுதாயத்திற்குச் செய்கின்ற இந்தத் தொண்டிற்கு ஆதரவாக பல சமுதாயப் பணியாளர்கள் மக்களிடையே பேசிவருகிறார்கள். ரூ. 7-ஐ ரூ. 10 ஆக்கிக் கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. இந்த ஆண்டு அது நடைபெறவில்லை. விரைவில் அது வரலாம்.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTI : Sir, may I know the rate at which blood is being supplied to the patients ?

THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU : No particulars are with me now about the rate at which blood is being given to the patients.

**திரு. டி. சந்தோஷம் :** இந்தத் தொகையை உயர்த்தவேண்டுமென்று போராட்டம் நடத்தவில்லை யென்றாலும் கூட அகிம்சா முறையில் ரத்த தானம் செய்வதில் அநேகம் பேர் ஒத்துழையாமை செய்கிறார்கள். அதனால் இப்போது அரசாங்க ஆஸ்பத்திரிகளில் ரத்த இருப்பு குறைந்து வருகிறது. பிரைவேட் ஆஸ்பத்திரிகளில் ரூ. 15 முதல் ரூ. 20 வரையில் கொடுக்கிறார்கள். அரசாங்கம் இதில் கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. ரூ. 7 இருப்பதை ரூ. 10 ஆக்கவேண்டுமென்று பரிசீலனை செய்துவருகிறோம். இன்னும் முடிவு எடுக்கவில்லை.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** அரசாங்க மருத்துவ மனைகளைத் தவிர வைத்திய தொழில் புரியும் தனிப்பட்ட மருத்துவர்கள் ரத்தத்தை சேகரித்து வைத்துக்கொள்வதற்கு அனுமதியிருக்கிறதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** கனம் உறுப்பினர் அவர்கள் கூறியதிலிருந்து தனியார் மருத்துவ மனைகளில் அப்படி ரத்தம் சேமித்து வைத்திருப்பது போலத் தெரிகிறது. ஆனால் இங்குள்ள குறிப்பில் அதைப்பற்றிய தகவல் இல்லை.

*X-Ray apparatus in Government Hospitals.*

* 270Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) the reasons for the frequent disrepair of the X-Ray apparatus in the Government Hospitals ; and

(*b*) the steps taken to prevent this ?

**அரசு மருத்துவச்சாலை நிழற்படக் கருவிகள்.**

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) :** மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சர்க்கார் மருத்துவச் சாலைகளில் உள்ள நிழற்பட கருவிகள் அடிக்கடி கெட்டுப்போவதற்கு காரணம் என்ன ?

(இ) இதைத் தடுக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?